**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்**

**அசல் வழக்கு எண். 50/2021**

2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 13 ம் நாள் Indian Oaths Act–1969 பிரிவு –6(2)ன் ஏற்பாட்டின்படி பிரதிவாதி தரப்பு சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.
(சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).
நாள் : 13.11.2025
பி.வா.சா.: DW2–

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலசுப்பிரமணியன் | தந்தை/கணவர் பெயர் | : | ராமசாமி |
| கிராமம் | : | கீரமங்கலம், கிருஷ்ணா நகர், | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | 77 | தொழில் | | |

முதல்விசாரணை

நான் இந்த வழக்கில் 3 ம் தரப்பினர் ஆவேன். நான் பிரதிவாதிகள் தரப்பு 2 வது சாட்சி ஆவேன். என் தரப்பில் நிரூபண உறுதிக்கூற்றை தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது என் கையொப்பம் தான். நான் சொல்ல சொல்ல பிரதிவாதிகள் வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.E. பட்டப்படிப்பு படித்துள்ளார். நான் கையொப்பம் செய்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் சொன்னேனா அல்லது 1 ம் பிரதிவாதி சொன்னாரா என்றால் நான் தான் சொன்னேன். ஜெயலெட்சுமி எப்போது மருத்துவமனையில் சேர்ந்தார், எந்த , எந்த மருத்துவமனையில் சேர்ந்தார், எத்தனை நாட்கள் அவர் மருத்துவம் பார்த்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதை என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியும், 04.03.2016 ம் தேதி திருச்சி காவேரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார். பிறகு 07.03.2016 ம் தேதி இறந்துவிட்டார். நான் சொல்வது பொய் என்றாலும், அதற்கு முன்பாகவே திருச்சியில் ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சையில் இருந்தார் என்றாலும் சரிதான்.

2. நான் சிகிச்சையில் சேர்த்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான், எனது மனைவி மற்றும் எனது குழந்தைகள் நல்ல முறையில் இறந்து போன ஜெயலெட்சுமியை பார்த்துக் கொண்டது குறித்த விவரங்கள அந்த மருத்துவமனையில் உள்ள பார்வையாளர் வருகைப்பதிவேட்டை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். எனது பிரமாண பத்திரிக்கையில் வாதி என்னையும், 1

ம் பிரதிவாதியையும் அணுகி மிரட்டி,பணம் கேட்டது சம்மந்தமாக சொல்லியுள்ளது குறித்து புகார் எதுவும் கொடுத்தேனா அல்லது தனிப்பட்ட நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனது மனைவியின் நிரந்தர முகவரி வங்கிக் கணக்கில் சென்னை முகவரியில் உள்ளது என்றால் இல்லை, திருச்சி முகவரியில் உள்ளது. நான் சொல்வது பொய் என்றாலும் , 1 ம் பிரதிவாதியான பி.வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டு சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. நான் சொல்வது போல் இறந்து போன ஜெயலெட்சுமியை நானோ, எனது மனைவியோ, குழந்தையோ எந்த காலத்திலும் பராமரிக்கவில்லை என்றாலும், அனாதையாக விட்டுவிட்டு சென்னைக்கு குடிபெயர்ந்து விட்டோம் என்றாலும், வாதி தான் அவருக்கு உடல்நிலை சரியில்லாத போது நல்லமுறையில் பராமரித்து உணவு, உடை, மருத்துவம் அளித்து வந்தார் என்றாலும் சரியல்ல. நானும் , எனது மனைவியும் இறந்து போன ஜெயலெட்சுமிக்கு ஈமைச் சடங்கு செய்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ளவர்கள் நான், எனது மனைவி 1 ம் பிரதிவாதி மற்றும் வாதி ஆவோம் என்றால் சரிதான்.

4. வாதி தான் இறந்து போன ஜெயலெட்சுமியை உடல்நிலை சரியில்லா இறுதி காலத்தில் பார்த்து வந்தார் என்றாலும், அவருக்குண்டான இறுதி சடங்கினைத் தனது சொந்த செலவில் செய்தார் என்றாலும், அதனால் இறந்து போன ஜெயலெட்சுமியின் சுவிகாரபுத்திரராக ஏற்றுக் கொண்டார் என்றாலும் , வா.சா.ஆ.1 ஆவணமான உயில் சாசனத்தை எழுதிக் கொடுத்தார் என்றாலும், அதில் என் மனைவியும் கையெழுத்து செய்துள்ளார் என்பது தெரிந்திருந்தும், இறந்து போன ஜெயலெட்சுமியின் வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மேற்படி வழக்கில் 1 ம் பிரதிவாதியான எனது மனைவிக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.